

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

## கர்த்தர் ஆயத்தம் செய்த பாதையின் 'முடிவு' நலமே!

**வா**ழ்க்கை, எக்காரணத்தைக் கொண்டும் "சுமக்க முடியாத பாரச் சுமை" என ஒரு கிறிஸ்தவன் மனம்பதறி கூறவே மாட்டான்! ஏனெனில் 'நம் திராணிக்கு மிஞ்சி' வாழ்வின் சுமை நம்மை நசித்துப்போட, தேவன் இடங்கொடார்! என, 1கொரிந்தியர் 10:13 வசனத்தின் மூலமாய் தேவன் நமக்கு அறிவித்திருக்கிறார்!

'இப்போது' உங்களுக்கு சுமையாகத் தோன்றும் பழுவைக்கூட, தேவன்மேல் உருட்டித் தள்ளிவிட்டு, அவரோடு நாம் சமாதானமாய் ஜீவித்திடவே தேவன் விரும்புகிறார் (1பேதுரு 5:7). ஆகவே, அவர் நமக்காக எந்தப் பாதையை ஆயத்தம் பண்ணியுள்ளாரோ, அந்தப் பாதையில் நடந்து, அவருடன் சம்பாஷித்து 'அவரிலேயே' நாம் பூரண நம்பிக்கை வைத்திடக்கடவோம்! நாம் அப்படிச் செய்திடக்கூடுமானால் "இறுதியில்" தேவனுடைய தயவுள்ள கரத்தின் செயல்களைக் கண்டு, நன்றியோடு அவரை நிச்சயமாய் துதித்திடுவோம்!

-*tr*

பெட்டகம் 40 அக்டோபர் பரல்கள் 10
2024



## ‘கர்த்தருடையவர்களுக்கு’ தூஷண வார்த்தை கூடாது!

ஒரு சமயம், ஆண்ட்ரூ முர்ரே தனது வண்டியில் சென்று கொண்டிருந்தார். ஒரு நதிக் கரைக்கு வரவும், அங்கே ஒரு வண்டி நதியின் கரையில் உள்ள சேற்றில் சிக்கி, அந்த வண்டியை இழுத்து வந்த எருதுகளால் சேற்றிலிருந்து மீள இயலவில்லை. எருதுகள் எவ்வளவோ முயன்றும் அவைகளால் ஒன்றும் செய்ய கூடாது போயிற்று. அந்த வண்டியின் எஜமானன் தனது கரத்திலிருந்த கம்பால் எருதுகளை அடித்து, தூஷண வார்த்தைகளால் திட்டி தீர்த்து, சபித்துக் கொண்டுமிருந்தான்!

அந்த துயர காட்சியை கண்ட குருவானவர் ஆண்ட்ரூ முர்ரே உள்ளங்கலங்கினார். “ஏன் அப்பா, கெட்ட வார்த்தைகள் பேசி எருதுகளை அடித்து நொறுக்குகின்றாயே?” என்று கேட்டார். “உங்களுக்கு என்ன தெரியும், தூஷணங்கள் பேசி கம்பால் மடங்கடித்தால்தான், இந்த எருதுகள் சேற்றிலிருந்து வண்டியை வெளியே இழுத்து வரும்” என்றான். ஆண்ட்ரூ முர்ரே வண்டிக்காரனிடம் “நல்லது, உனது மாடு அடிக்கும் கம்பை என்னிடம் கொடு” என்று வாங்கி, ஒரு கனம் பரத்துக்கு நேராக ஏறெடுத்து விட்டு, அப்படியே சற்று அந்த கம்பால் எருதுகளை ஒரு தட்டு தட்டினார்! அவ்வளவுதான், எருதுகள் மடமடவென்று வண்டியை சேற்றிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்துவிட்டது! “என் சகோதரனே, அசுத்தமான தூஷண வார்த்தைகள் பேசாமல் உனது வண்டியின் எருதுகளை நல்ல விதமாக நடத்தினால், வண்டியை எந்த சிரமமுமின்றி கொண்டு செல்லலாம் என்பதை நீ நன்கு புரிந்துகொள்” என அன்புடன் கூறினார். அன்று, அந்த எருதை ஓட்டிய மனுஷன் “தூஷண வார்த்தைகள் கொடிய அருவருப்பானது” என்பதை ஆண்ட்ரூ முர்ரேயிடம் கற்றுக் கொண்டான்!

*-Ed*


சுவிசேஷ செய்திகளின் புதிய You Tube சேனல்: **gospelforall**

இந்த புதிய You Tube சேனலை அநேகருக்கு அறிமுகப்படுத்துங்கள்

(வாரந்தோறும் செவ்வாய்கிழமை மாலை 7.00 மணிக்கு ஒளிபரப்பாகும். சுவிசேஷ செய்திகளை குடும்பமாய் பாருங்கள்)



**பரலோக பொக்கிஷங்கள் – மாதாந்திர பத்திரிக்கை**

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## சுடு வெயிலும், மழையும், கர்த்தர் கரத்தில்தான் உள்ளது!

*வாழ்வின் துக்கமே, வாழவைக்கும் அருமருந்து*

தேவன் தனக்கு நிகழச் செய்த சோக நிகழ்வுகளைக் குறித்து, ஒரு சாதாரண மனிதன் துக்கமடைவதைப் போலவே, யோபு சாம்பலிலும் தூளிலும் அமர்ந்து துக்கமடைந்தார். ஆகிலும் வெகு சீக்கிரத்தில், தன்னுடைய துயர நேரத்தில் புதிய தைரியத்தை வரவழைத்துக் கொண்டார். இதைப் பவுல் குறிப்பிடும்போது "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை, நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாக (தேவனுடைய சொந்த ஜனத்தின் நிமித்தமாக) **நான் சகிக்கிறேன்**" (2தீமோ.2:10) எனக் கூறினார். இதைத்தான், அந்த இக்கட்டு நேரத்தில் *யோபு* புரிந்து தெளிவடைந்தார். அது என்னவெனில் "தெரிந்து கொள்ளப்பட்ட தேவ மனிதர்கள் 'எந்நிலையிலும்' தனக்காக ஜீவிப்பதில்லை!" என்ற உண்மைதான்.

அவருடைய இந்த மனத் தெளிவுதான் 'யோபுவாகிய அவரது வாழ்க்கை' உங்கள் வாழ்க்கையாக மாற முடியும், என்ற நம்பிக்கையான வெளிச்சம்! அவ்வாறு உங்களுக்கு நடந்துவிட்டால், 'என்னுடைய வாழ்க்கை' பிறருக்காக எழுதப்படும் விலையேறப்பெற்ற வாசகமாய் மாறிவிடவும் தொடர்ச்சியாய் வகை செய்கிறது! என்ன என்ன உபத்திரவங்கள் நமக்கு சம்பவிக்கப்போகிறது என நம்மில் ஒருவரும் அறிந்திருக்கவில்லை!

> "
> **ஆகிலும் தன்னுடைய வியாதி, உபத்திரவங்களோடு சகித்து கடந்து வந்த அந்த யோபுவின் நாட்கள் நமக்குரிய நீங்காத நினைவுகூருதலாய் மாறிவிட்டதைப் பாருங்கள். அப்படி இல்லாதிருந்தால் அவரது வாழ்க்கையை "ஜீவப் புஸ்தகத்தில் எழுதிட" கர்த்தர் அனுமதித்திருக்க மாட்டார்!**

ஆகவே வேதனை, துன்பங்கள் ஊடாய் சென்று 'விசுவாச சேதம் ஏற்படாமல்' நீங்கள் **சகித்து வாழும்போது** 'பிரகாசமான

*மகிமையை' தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஜனங்களுக்கு வழங்கிடும் பாக்கியத்தை, நீங்களும் பெற்றிட முடியும். இவ்வித வாழ்க்கை வாழும்படியே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்!*

*அப்படியிருக்க, 'நமது துக்கமான நாட்களே, நம் ஜீவியத்தின் மதிப்புமிகுந்த நாட்கள்' என்ற சத்தியத்தை இன்று ஏன் பெரும்பாலோர் அறியாது வாழ்கிறார்கள்?:*

> "
> **காலமெல்லாம் தாங்கள் நடந்துவரும் ஜீவிய பாதையில் வசந்த மலர்கள் தூவியிருக்க விரும்பியவர்களும், தங்கள் முகங்குளிர புன்னகை தரும் சம்பவங்களை மாத்திரமே நோக்கமாய் கொண்டு வாழும் அனைவருமே இந்த உண்மையை, அதாவது 'துக்க நாட்களே நமது மகத்துவ நாட்கள்' என்பதை அறியாதவர்கள்!**

*அதுஏனென்றால், எப்போதும் லோக மகிழ்ச்சியிலும் மனதிற்கு விரும்பும் உற்சாகத்திலும் நாட்டம் கொண்டவர்களின் ஆத்துமா "கர்த்தருக்குள் ஆழ்ந்த ஜீவியத்தின் மேன்மையை" பெற்றுக்கொள்ள மாட்டார்கள்! எவைகளை அவர்கள் திருப்தியென்று எண்ணினார்களோ, அவைகள் ஒரு சிறு பிள்ளை சுவைக்கும் தற்கால பஞ்சுமிட்டாய் போலவே 'மாயையாய்' மாறிவிட்டது! இந்த பஞ்சு மிட்டாய் போன்ற லோக சுகத்தை நாடியவர்களின்* **இருதயமோ வளர்ச்சியின்றி** *சுருங்கி போய்விட்டது. தேவன் அவர்களுக்கு வைத்திருந்த மாறாத* **தெய்வீக இயற்கை** *உயர உயர வளரவும்! ஆழங்களுக்குள் பாய்ந்து செல்லவும்! தன்மை கொண்டது. இவர்களின் மாய இன்பம், இருதய வளர்ச்சியை மட்டுப்படுத்தி விட்டது. சீக்கிரத்தில் பொசுங்கிப் போகும் முட்செடி தீயாய் 'படபடவென' எரிந்து விட்டு 'மகிழ்ச்சியின் பள்ளத்தாக்கை' இழந்துவிட்டார்கள். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" (மத்.4:4) என்ற வசனத்தையே இவர்கள் மறந்துவிட்டார்கள்! மழை காலத்தில் தோன்றும் இருண்ட வானத்தில்தான், நட்சத்திர கூட்டங்கள் அனைத்தும் அதிக பிரகாசமாய் பிரகாசிக்கும்! ஆட்கள் ஏறமுடியாத பனிமலையின் உச்சியில்தான் 'ஜெட்டியன்' என்ற அபூர்வ மலர்கள் பூத்து மலர்கின்றன!*

*தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குதத்தங்கள், நம் வாழ்க்கையை வளம் கொழிக்கச் செய்வதற்காகவே "திராட்ச ஆலையில் குவிந்திருக்கும் திராட்ச பழங்கள் நசுக்கப்படுவதற்காக" காத்திருக்கிறது! துயரத்தின் குகைக்குள் சென்றவர்கள் மாத்திரமே, "நமக்காக துக்கத்தின் மனிதராய்" மாறியவரின் (ஏசா.53:3) மெல்லிய சாந்த குணத்தைப் புரிந்து கற்றுக்கொள்வார்கள்.*

நீண்ட சுட்டெரிக்கும் கோடை காலத்தால், வறண்டு போன நிலமாய் மாறிய போதிலும் "அவர்களுக்குள் பிரகாசிக்கும் சூரிய ஒளி" ஜொலித்துக் கொண்டுதான் இருக்கிறது! இப்போது நீங்கள் நன்றாய் அறிந்து கொண்டதெல்லாம் 'எனக்கு அருமையானதையெல்லாம் கர்த்தர் அறிவார்!' மேலும், தகிக்கும் சூரியனோ அல்லது குளிர்ந்த மேகங்களோ என் ஆண்டவருடைய உத்தமத்திற்கே காத்து நிற்கின்றன:

*வெயிலின் உச்சத்தில் செருப்பு தைத்துக் கொண்டிருந்த ஒரு கிறிஸ்தவ ஷு மேக்கர் கூறிய வார்த்தைகள் இன்றும் ஸ்காட்லாந்து தேசத்தில் போற்றுத்தற்குரிய வாசகமாய் எழுதப்பட்டுள்ளது! அதுஎன்னவெனில்: தன் பரட்டைத் தலையோடு தன் சிறு மகளின் விரலைப் பிடித்துக்கொண்டு "மகள் தீனாவே, வானத்தை அண்ணார்ந்து பார்! சுடும் வெயில் தணிந்து, அந்த கார்மேக கூட்டங்களின் ஓரத்தில் பிரகாசிக்கும் ஊதா நிறத்தை கண்டாயா? அதைப் பார்க்க பார்க்க, நம் ஆண்டவரின் அழகையும் தயவையும் எண்ணி, அந்த ஊதா நிறத்தால் நம் இருதயத்தை எவ்வளவு குளிரச் செய்துவிட்டார் என்பதைப் பார் மகளே!"*

.....என்ற அற்புத வாசகம் நிறைந்த சித்திரம் ஸ்காட்லாந்து மக்களின் அநேகருக்கு பொன்னான வாசகமாய் பதிந்து உள்ளது! இதுவே, நீங்கள் கடந்துவரும் துக்கநாட்களை மனம் குளிர்ந்த நாட்களாய் மாற்றுவதாக! ஆமென்.

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## 'சிந்தையில் இளைப்பாறுதல்' ஜெய வாழ்விற்கு முதல்படி!

*'ஆத்துமாவில் இளைப்பாறுதல் பெறாமல்' ஜெயமில்லை*

"கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்..... இனி ஜீவிப்பது நானல்ல" கலாத்தியர் 2:20 (விரிவாக்க ஆங்கில வேதாகமம்). இந்த வசனத்தின் மகத்துவத்தை எண்ணிப் பாருங்கள். ஒருவன் தேவனிடத்தில் இளைப்பாறுதல் கண்டடைவதற்கு இந்த வசனமே முக்கிய பங்காய் திகழ்கிறது! நீங்கள் இந்த வசனத்தை அப்படியே விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் இந்த வசனத்தின் பின்னால் மறைந்திருக்கும் மிகப் பெரிய ஆதாயத்தை நீங்கள் கண்டிப்பாய் கண்டடைவீர்கள். ஆம், நீங்கள் "தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பீர்கள்!" என்பதே அந்த ஆதாயம்! ஆனால், நான் இங்கு வருத்தத்தோடு சொல்லும் செய்தி என்னவென்றால் "இந்த வசனத்தை அநேக கிறிஸ்தவர்கள், விசுவாசிக்கவில்லை!" என்ற துயரமே ஆகும். இந்த அருமையான விசுவாசத்திற்குப் பதிலாக, இந்த வசனத்தை

*விளக்கிக் கூறி பிரசங்கிப்பதற்கு கூட்டம் கூட்டமாய் நின்று கொண்டிருக்கிறார்கள்!*

"

**இயேசு கொண்டு வந்த மகிமையான சுவிசேஷத்தை விளக்கிப் பேசி தீர்த்துவிட்டு, சிறிதுகூட பலனை அடையாமல், பூட்டிய கதவிற்கு வெளியே நிற்கிறார்கள். அதாவது "அவர்கள் அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்காமல்" வெளியே நின்று மடிந்து போகிறார்கள்!**

*கொஞ்சம் விழித்துக்கொள்ளுங்கள்! இனியும், காலமெல்லாம்* **இளைப்பாறுதலற்ற சொந்த வழி ஜீவியத்தில்** *தங்கிவிடாமல், இன்றாவது தேவன் வைத்திருக்கும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திட வேண்டுமே என உங்கள் மனம் தவிக்க வேண்டாமா? இளைப்பாறுதல் அறைக்குள் பிரவேசித்திட உங்களுக்கு விசுவாசம் இல்லாமல், ஏன் அவிசுவாசம் ஏற்பட்டது? வசனம் கூறுகிறப்படி, 'பொல்லாத இருதயமே' உங்கள் அவிசுவாசத்திற்கு காரணம் என்பதை, இன்று அறிந்துகொள்ளுங்கள்! (எபி.3:12). உங்கள் அவிசுவாசத்தினால், உங்கள் அலைமோதும் நிம்மதியற்ற வாழ்வை எண்ணிப்பாருங்கள்! இன்றாவது, தேவன் வழங்கும் இளைப்பாறுதலின் அறைக்குள் "விசுவாசத்தால் நிறைந்து" பிரவேசித்திட வாருங்கள்!*

*நீங்கள் மனம்திரும்பிவிட்டீர்களா? அப்படியானால் "உங்கள் பழைய மனிதன் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப் பட்டான்" என்ற* **ரோமர் 6:6–ம் வசனத்தின் மீது ஓர் உயிருள்ள விசுவாசம் வைத்திட** *இன்னமும் ஏன் தயங்குகிறீர்கள்? இன்றுவரை, நிம்மதியற்ற, இளைப்பாறுதல் இழந்து வாழ்கின்ற வாழ்க்கைக்கு, உங்களின் 'பழைய மனிதனே' காரணம்! இன்று முதல், வசனத்தில் உறுதியாய் நிலைகொண்டு, பழைய மனிதனை தீர்மானத்துடன் புறக்கணிப் பவர்கள் யாராயிருந்தாலும், நிச்சயமாய் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்! இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்..... உங்களுக்கு இன்னமும் புரியவில்லையா? உங்களுக்குப் புரியும்படி, ஓர் உயிரோட்டமான நிகழ்ச்சியை நான் உங்களுக்கு கூறுகிறேன். அப்போதாவது, நீங்கள் விசுவாசம் கொண்டு இளைப்பாறுதலை கண்டடைவீர்கள் என நான் நம்புகிறேன்.*

"

**எங்கள் வீட்டின் அருகில் உள்ள ஒருவர் மரித்துவிட்டார்! இதுவே நான் உங்களுக்கு சொல்ல நினைத்த நிகழ்ச்சி! அவரை வைத்த சவப்பெட்டியின் மேல் என்ன எழுதினார்கள் தெரியுமா? "இந்த கனவான், இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டார்!" என எழுதி**

வைத்தார்கள். இப்போது சத்தியம் உங்களுக்கு புரிகிறதா?

*ஆம், நிம்மதியற்ற வாழ்க்கைக்கு காரணமான உங்கள் பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையுண்டு சாகட்டும்! உங்களை தயவாய் கேட்டுக் கொள்கிறேன்...... இந்த நிமிடமே கலாத்தியர் 2:20ம் வசனத்தையும் ரோமர் 6:7ம் வசனத்தையும் புரட்டி* **இப்போதே வாசியுங்கள்.** *உங்கள் நிம்மதியைப் பிடுங்கி சீரழித்த பழைய மனிதனை உதறிதள்ளி, சிலுவையில் ஆணியடித்து..... "நீ சாகக்கடவாய்!" எனக் கூறுவது எத்தனை பேரின்பம்! எத்தனை பெரிய இளைப்பாறுதல்! ஆம், மரித்தவன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பான்!*

*இந்த சரீரத்தில் நான் பிழைத்திருக்கும்போதே, மரித்திட முடியும்! என்பதே உயிருள்ள விசுவாசம். ஆனால் அவிசுவாசம் கொண்டவர் களுக்கோ, இது ஒரு புரியாத இரகசியம்!*

*பழைய மனிதனை என்னோடு வைத்துக் கொண்டு, அவனோடு இசைந்து வாழ்ந்த எல்லா பாவத்திற்கும் மரித்து, என் இருதயத்திற்கும் மனதிற்கும் சொல்லி முடியா இளைப்பாறுதல் வருவதைப் பெறுவது ஓர் பாக்கியம்! அதே சமயம், என் சரீரமோ 'இன்னமும்' பாவத்திற்கு அடிமையாய் இருப்பதற்கே முயற்சிக்கிறது. இந்த பாவ சரீரம் என்பது வேறு, விசுவாசத்தில் பழைய மனிதன் மரித்து என் சிந்தையிலும் இருதயத்திலும் இளைப்பாறுதல் அடைவது வேறு! இந்த 'பாவ சரீரமும்' 'நம் இருதயமும்' ஒன்றுக்கொன்று முரணானவை! வேத வசனத்தின் வலிமை மாத்திரமே, இந்த இரண்டையும் பிரித்து நமக்கு விடுதலை தருகிறது! முதலாவது நம் இருதயமும் சிந்தையும் வேத வசன வலிமையால் பிரிக்கப்பட்டு இளைப்பாறுதலில் ஜீவித்தால், இரண்டாவது பகுதியாகிய பாவ சரீரத்தின் மீட்பு துரிதமாய் நமக்கு கிட்டும்..... இதுவே சுவிசேஷம் நமக்கு வழங்கும் அற்புத நம்பிக்கை! இந்த நம்பிக்கையில் நாம் களிகூரக்கடவோம்! அல்லேலூயா!*

*'சுவிசேஷத்தின் இந்த ஆச்சரியம்' இன்னமும் உங்களுக்கு கைகூடாமல் வாழ்வது துயரம் அல்லவா! இந்த சாவுக்கு ஈனமான சரீரத்தை, நான் இன்னமும் சுமந்திருந்தாலும்..... அதே வேளையில், நான் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறேன்!! இந்த ஆச்சரியமான, உயிருள்ள விசுவாசத்திற்காக நான் தேவனை மிக அதிகமாய் ஸ்தோத்தரிக்கிறேன்! நான் பெற்ற இந்த உற்சாகமான இளைப்பாறுதல் உங்களுக்கும் கிட்டுவதாக!! ஆமென்.*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

*உள்ளான பரிசுத்தமே, சபையின் வலிமை*

*ஒரு நபரின் இருதயத்திற்குள் பிரவேசிக்க ‘ஒரு திறப்பு’ பெற்றுவிட்டால், ஆவிக்குரிய காரியங்களை அவரோடு பேசுவதற்கு உங்களுக்கு மிக எளிதாய் இருக்கும். ஆகவேதான், தேவனுக்குகூட, எதைக்காட்டிலும் ஒரு மனுஷனுடைய இருதயமே தேவையாயிருக்கிறது! தேவன் இருதயத்தில் வாசம் செய்வது ஒன்றே, நம்மை பாழாக்கும் கொடிய பாவங்களாகிய குடிவெறியையும், திருட்டுப் பழக்கத்தையும்கூட அழித்துவிட முடியும். சபையிலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும், இவ்வித “இருதயத்தின் மாற்றத்தை” பெற்றுவிட்டால் அந்த சபை முழுவதும் தெய்வ சமாதானத்தால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும்! அந்த சபை, காலமெல்லாம் மறுரூப பாதைக்குள் இடைவிடாது சென்று கொண்டேயிருக்கும்!*

ஒரு மனிதனின் ‘உள்ளான பரிசுத்தம்’ சீர்கேடாகி விட்டால், இந்த உலகத்தில் நாம் காண்பதைப் போலவே அவனுக்குள்ளும் அநேக பாவங்கள் பிரவேசித்து விடும்! ஆகிலும், இவ்வளவு கேவலமான நிலை கொண்டவனின் பாவங்கள்கூட, உள்ளான ‘தெய்வ தியானம்’ அவனுக்குள் பிரவேசித்துவிட்டால் சீர்கெட்டவை அனைத்தும் சீராக்கப்பட்டுவிடும்! எங்கே விசுவாசமும் ஜெபமும் குறைந்திருக்கிறதோ, அங்கே பாவம் வேகமாய் வந்து ஆட்கொண்டுவிடும். எனவே, நிலை தவறி அலைந்து கொண்டிருக்கும் சகோதரர்களிடம் “**எளிமையான விசுவாசத்தைப் பெற்று, உற்சாகமாய் ஜெபித்திட” கற்றுத்தாருங்கள்!** அதுபோதும். இதை விட்டுவிட்டு, முடிவில்லாத காரண தர்க்கங்களை நீங்கள் பேசத் துவங்கிவிட்டால், அந்த சகோதரர்களை ஆதாயம் செய்ய இயலாது.

> **“உள்ளான ஆத்துமாவை வழிநடத்த அறிந்து கொண்டவர்கள் மாத்திரமே, அவர்களை “தேவனுடைய கரத்திற்குள் இனிமையாய் நடத்த” அறிந்திருப்பார்கள்!**

‘உள்ளான ஆவிக்குரிய மனிதனை’ புறக்கணித்த ஒரு மனிதன் அடைந்திடும் நஷ்டம் அளவிட முடியாததாயிருக்கிறது. தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களிடம் ‘இந்த மறைவான பொக்கிஷத்தை’ அவர்கள் உள்ளத்தில் பதிய வைத்திட அறியாதவர்கள், தேவனுக்கு முன்பாக அவர்களைக் குறித்த கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை அறிவார்களாக! நீங்கள் ஒருவேளை, இந்த சகோதரன்

ஆவிக்குரியவைகளை நிதானித்து அறிய திறனற்றவனாயிருக்கிறான் என நீங்கள் கூறுவதையெல்லாம் கர்த்தர் ஏற்றுக்கொள்ள மாட்டார். அது ஏனென்றால் "கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" (சங்.19:7) என்றே வேத வாக்கியம் உறுதி அளித்திருக்கிறது.

சற்றே உங்களை கேட்டுப் பாருங்கள்:

1. இயேசு கிறிஸ்து காண்பிக்கும் மெய்யான வழி நடப்பதில் **என்ன சிரமம்?**
2. நம்மையே முற்றிலுமாய் அவருக்குத் தந்துவிடுவதில் **கஷ்டம் இல்லையே?**
3. அவர் மீதே உங்கள் கண்களை தொடர்ச்சியாய் பதிய வைத்து, உங்கள் நம்பிக்கை முழுவதையும் 'அவருடைய கிருபையின் மேல்' **சார்ந்து கொள்வது எளிதானதல்லவோ?**
4. அவருடைய மாசற்ற அன்பிற்கு, உங்கள் முழு ஆத்துமாவின் பெலனையும் ஒப்புக்கொடுப்பது **நிம்மதி வாழ்க்கையல்லவோ?**

> "
> **இதுபோன்ற அறிவை, இந்த உலகில் பேதைகள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். அவர்களிடத்தில் இயல்பாகவே காணப்படும் களங்கமற்ற அறியாமையும், தாழ்மையான சுபாவமும் தெய்வத்துவத்தை அறிந்து கொள்ள வகை செய்கிறது.**
>
> *- மேடம் குயான்*

---

## வரமல்ல 'ஜீவியத்தில்' தெய்வீகம் பிரதிபலித்த சாது சுந்தர்சிங்!

*நம்மில் 'இயேசுவின் சாயல்' பிறரின் நோய்களை சுகமாக்கும்*

தமிழ் நாட்டிலுள்ள நாகர்கோவில் பட்டணத்தின் தெருவழியாக சாது சுந்தர்சிங் நடந்து சென்று கொண்டிருந்தபோது, மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு அம்மாள், தனது வீட்டிலிருந்து அவரை கண் ஏறிட்டுப் பார்த்தபோது, அவர்கள் தனது பைத்தியம் முற்றிலுமாக நீங்கி சுகம் பெற்ற அதிசயம் யாவருமே அறிந்த நிகழ்வாகும்!

இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரத்திற்கு, சாது சுந்தர்சிங் ஒருமுறை சென்றிருந்தபோது, அவர் அங்குள்ளதொரு கிறிஸ்தவ வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டிக்கொண்டு நின்றார். அந்த வீட்டின் தலைவி சமையல் அறையில் தனது வேலையை கவனித்துக் கொண்டிருந்தார்கள். முன்னறையில் விளையாடிக் கொண்டிருந்த சின்ன மகள் கதவண்டை ஓடி வந்து கதவைத் தட்டுவது யார்? என்று

கண்டறிவதற்காக வந்தாள். கதவைத் தட்டி நின்ற சுந்தரைக் கண்ட குழந்தை, சற்று நேரம் **அவருடைய பரிசுத்தம் வீசும் முகத்தை கூர்ந்து கவனித்து விட்டு,** தாயாரண்டை சென்று "அம்மா வந்து பாருங்கள், இயேசு நம் வீட்டின் கதவைத் தட்டிக் கொண்டு நிற்கின்றார்" என்று கூறினாள்!

> "அந்த சின்னஞ் சிறுமிக்கு, இயேசு இரட்சகரை சாது சுந்தர் சிங்கின் முக சாயலில் மிக எளிதாக காண முடிந்தது! இன்று நமக்குத் தேவையான பரிசுத்த வாழ்க்கையும், பக்தசிரோன்மணி சாது சுந்தர்சிங் மேற்கொண்டது போன்ற பரிசுத்த வாழ்க்கைதான்!

சுந்தர் நினைத்திருந்தால் வியாதியஸ்தர்களை குணமாக்கி, ஒரு மாபெரும் அதிசய ஊழியத்தைத் தொடங்கி, திரள் கூட்ட கிறிஸ்தவர்களை தனக்குப் பின்னாக வரப்பண்ணியிருக்கலாம். ஆனால் அந்த 'பரிசுத்த ஏழை மனிதனுக்கு' அதில் எல்லாம் கொஞ்சமும் நாட்டமும் தேட்டமும் கிடையாது. வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பதை அவர் மனதார விரும்பவே இல்லை என்று சொன்னால் கட்டாயம் நீங்கள் ஆச்சரியம் கொள்ளுவீர்கள்! சுந்தரைப் பார்த்த ஒரு பார்வையிலேயே, மேலே குறிப்பிட்ட பைத்தியம் கொண்ட அம்மாள் சுகம் பெற்றிருந்தால், அவர் வியாதிக்காரருக்காக கை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தால், எத்தனை அற்புதம் நிகழ்ந்துவிடும்! ஆனால் சுந்தர் 'தனது முழு கவனத்தையும்' பாவ மாந்தரின் இரட்சிப்பின் காரியத்திலேயே பதித்திருந்தார். **வியாதிகளை குணமாக்கும் வரத்தை தனது கரத்தில் எடுத்தால், ஆத்தும இரட்சிப்பின் காரியம் முற்றுமாக அடிபட்டுப் போகும் என்பதை அவர் மனதார அறிந்திருந்தார்!**

தங்களது வியாதிப்பட்ட மகனுக்கு ஆஸ்பத்திரியில் வந்து ஜெபிக்கும்படியாக சுந்தரை ஒரு குடும்பத்தினர் விடாப்பிடியாய் அழைத்தனர். ஆனால் நமது சுந்தரோ, ஒரேயடியாக அதை மறுத்து நின்றார்! தனக்கு வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படியான தேவ ஏவுதல் இல்லை என்றும், அவ்வித வரம் தனக்கு கிடையாது என்றும் சாதித்து விட்டார். ஆனால் அந்த குடும்பத்தினரோ அவரை விட்டபாடில்லை. கடைசியாக சாது சுந்தர் சிங்கை தங்கள் மகன் படுத்திருந்த ஆஸ்பத்திரிக்கே கூட்டிக் கொண்டு சென்றுவிட்டனர். சுந்தர் அந்த மகனுக்காக மனதுருகி ஜெபித்தார்! ஆனால் அந்த பையனின் சுகவீனம் இரட்டிப்பான விதத்தில் அதிகரித்தது.... அதைக் கண்ட பெற்றோர் கண் கலங்கினர். இந்த இக்கட்டான நேரத்தில் ஆச்சரியமான பிரகாரம், திடீரென்று அந்தப் பையன் பூரண சுகம்

அடைந்து, ஆஸ்பத்திரியை விட்டுப் போனான். இதைத்தான் சாது சுந்தர்சிங் எதிர்பார்த்தார்! **முதலாவது, ஆத்தும இரட்சிப்பின் சுகம்! பின்பு, சரீரசுகம்!!** அந்த வாலிப பையன் இப்போது **பூரண சுகம்** பெற்று விட்டான்!

அப்படிப்பட்ட பரிசுத்த பக்த சிரோன்மணி சாது சுந்தர்சிங், தனது பரிசுத்த வாழ்வை தாவீதைப் போன்ற நடனங்களின் மூலம் உலகுக்கு காண்பிக்கவில்லை. அப்படி நடனம் பண்ண அவருக்கு எல்லா பரிசுத்த தகுதிகளும் நிறைவாக இருந்தன. ஆனால் வெளியரங்கமாக நடனம் பண்ணுவதையும், ஆவியில் நிரம்பி அங்கும் இங்கும் துள்ளிக் குதித்து கன்றுக் குட்டி போல சாடுவதையும், அவர் விரும்பவில்லை! அப்படிச் செய்வதற்கு பதிலாக அவர் மற்றொரு மேன்மையான காரியத்தை தேவநாம மகிமைக்காக செய்தார். அது என்னவெனில், **ஜெபத்தில்** மணிக்கணக்காக, நாட்கணக்காக, வாரக்கணக்காக போராடி, போராடி இயேசுவை போன்ற **பரிசுத்தத்தின் சாயலை** அவர் தம் உள்ளத்தில் பெற்று, அது அவரது முகத்திலும் பிரதிபலித்தது!

சாது சுந்தர் சிங்கிற்கு மிகவும் ஆதரவாக, அவரோடு சிம்லாவிலுள்ள சுபத்து என்ற இடத்தின் பங்களாவில் இருந்த, ஒரு கர்த்தருடைய பிள்ளை சுந்தரைப் பற்றி இவ்விதமாக குறிப்பிடுகிறார். "சுந்தர், பல மணி நேரங்கள் தேவனோடு ஜெபத்தில் செலவிட்ட பின்னர், அவர் தனது அறையிலிருந்து வெளியே வருவார். அந்த நேரம் அவரது முகத்தில் 'கர்த்தரின் பிரசன்னம் நிறைந்து' அவரின் முகம் தேவ மகிமையால் பிரகாசித்துக் கொண்டிருக்கும்! அப்படிப்பட்ட நேரம் அந்த பரிசுத்தமான முகத்தைப் பாவியாகிய நான் காண பயந்து, கொஞ்ச நேரம் அவரைக் கண்டு கொள்ளாமல் அப்படியே விலகியிருந்த நாட்கள் எத்தனையோ உண்டு" என்கின்றார்.

> "
> **ஆம், அன்றும் இன்றும் தேவனுடைய பார்வையில் மேன்மையாய் இருப்பதெல்லாம் "பரிசுத்த ஜீவியமே"ஆகும். அதை இழந்து விட்டு பேசும் "எந்த தாற்பரியமும், உபதேசமும், அற்புதமும்" செல்லுபடியாகாது!!**

"ஆதியிலே தேவன்" என்பதுபோல், ஆதி மிஷனரி வாழ்க்கை புரிந்த பரிசுத்தவான்களை உற்று நோக்குவது எத்தனை பக்தி விருத்திக்குரியதாய் இருக்கிறது! ஒன்று நிச்சயம், இவர்கள் வரங்களை உபயோகித்திருந்தாலுமே கூட, அதை ஒருபோதும் மேன்மைப்படுத்தவே இல்லை!

- சாது சுந்தர்சிங்

## எனக்கென்று என்ன வேண்டும், நீரே என் சொந்தம்!

*'எதுவாகிலும் ஆகட்டும்' என்பதே முழு அர்ப்பணம்*

"நான் எனக்குச் சொந்தமானவனல்ல, உமக்கே சொந்தம்!
நீர் விரும்பும் சூழ்நிலைகளில் என்னை நீர் வைத்தருளும்,
எவர்களோடு சேர்த்து வைக்க விரும்புகிறீரோ,
அவர்களோடு என்னைச் சேர்த்து வைத்திடும்,
எனக்கென்று என்ன வேண்டும் ??

மகத்துவ காரியங்கள் செய்திட வைத்திடும்!
அல்லது பாடுகள் நிறைந்த வாழ்விலும் வைத்திடும்!
உம் பணியில் துரிதமாய் இருக்கவோ,
அல்லது யாதொன்றும் செய்யாதிருக்கவோ வைத்திடும்!
எனக்கென்று என்ன வேண்டும் ??

உயர்த்தப்படவோ அல்லது உமக்காக தாழ்த்தப்படவோ வைத்திடும்!
சம்பூரணத்திலும் அல்லது இழந்துபோன வெறுமையிலும் வைத்திடும்!
எல்லாம் எனக்கு உண்டாயிருக்கவோ அல்லது இல்லாதிருக்கவோ வைத்திடும்,
எனக்கென்று என்ன வேண்டும் ? ? ?.....

*என்னையே உமக்கென்று தந்து விட்டனே! இனி, எல்லாம்*
*உம் விருப்பம்... அது எதுவானாலும், அதுவே என் பாக்யம்!*
*மகிமை பொருந்திய என் பரம பிதாவே, நேச குமாரனே, தூயஆவியே*
*நீரே என் சொந்தம், நான் உம் சொந்தம்! அது அப்படியே ஆகட்டும்!*
*இன்று, இப்பூமியில் நான் செய்திடும் இந்த உடன்படிக்கை*
*பரலோகத்திலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக, ஆமென்."*

*- ரிச்சர்ட் ஆலின்*

---

## என்னை போஷித்து காத்திட்ட ஆண்டவரின் உத்தமம் பெரிது!

*அவரால் அழைக்கப்பட்டவர்களை, எக்காலத்தும் கைவிட்டதில்லை*

கர்த்தரையும் அவரது அழைப்பையும் மாத்திரமே நம்பி, வேலையை விட்டுவிட்டு 'முழுநேர ஊழியத்திற்கு' வந்த என் குடும்பத்தை கர்த்தர் உண்மையுள்ளவராய் இருந்து போஷித்து நடத்தினார் என்பதே **என்னுடைய மன நிறைவான சாட்சி!** இங்கேதான் தேவனுடைய மாறாத வாக்கும், கிருபையும் விளங்குகிறது. நான் எவ்வளவு குறைவுள்ளவனாயிருந்தபோதிலும், என் ஆண்டவருக்குச் செய்து வந்த ஊழியத்தில் மாயமாகவோ, வஞ்சகமாகவோ நடந்தவன்

*அல்ல! அவருடைய காரியத்தையே பிரதானமாகத் தேடினவன்! எவ்வளவு கஷ்டங்கள் கவலைகள் என்னைச் சூழ்ந்திருந்தாலும் சோர்ந்து போகாமல், அவருடைய ஊழிய பணிகளை உற்சாகமாய் செய்து வந்தவன்!*

*'பிற்காலங்களில்' என் மனைவி மரணதறுவாயில் இருந்தபோது, ஞாயிறு ஆராதனையை நடத்த, வேறொருவரைத் தேடாமல், நானே ஆலயம் சென்று ஆராதனையை உற்சாகமாக நடத்தினேன். இதைக் கண்ணுற்ற சபையார் ஆச்சரியப்பட்டார்கள். இவ்வாறு என் காலத்தை, பலத்தை, வரத்தை, என் முழுமையையும் தேவ ராஜ்யத்திற்காக நான் செலவிட்டு வந்தபடியால், யாதொரு நிரந்தர சம்பாத்தியம் எனக்கு இல்லாத அந்த காலத்தில், 'எல்லாம் கூடக் கொடுக்கப்படும்' (மத்.6:32) என்று அவர் சொன்ன வாக்குப்படியே எங்களுக்குத் தேவையானதைக் கொடுத்து எங்களை ஆதரித்து வந்தார்!*

**“ நான் என் பிள்ளைகளிடமோ, என் சிநேகிதர்களிடமோ, இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளிடமோ அல்லது சபையோரிடமோ என் குறையைச் சொல்லி எனக்கு உதவி செய்யும்படி நேராகவோ, ஜாடையாகவோ கேட்டவனல்ல!**

*ஆண்டவர் தாமே, யார் யாரை எனக்கு உதவி செய்யும்படி ஏவினாரோ அந்த தேவ பிள்ளைகள், தாங்களாகவே சந்தோஷமாய் அனுப்பித் தந்தபடியே கர்த்தர் எல்லா தேவைகளையும் சந்தித்தார்!*

*சிறிதும் எதிர்பாராத பிரகாரம், தேவ மக்களிடமிருந்து சகாயம் வரும்! அனுப்புகிறவர்கள் தங்கள் கடிதங்களில்: இந்தச் சிறுதொகையை நீங்கள் பெற்றுக்கொண்டு எங்களுக்காக ஜெபியுங்கள் என்றும் எழுதுவார்கள். அந்த காணிக்கை பெற்றவுடனே, ஆண்டவருக்கு அதைக் காண்பித்து, அவரை ஸ்தோத்தரித்து, அவர்களுக்காக ஜெபித்து, உடனே பதிலும் எழுதுவேன்.*

**“ ஏராளமாக அல்ல, குறைவாகவும் அல்ல, எங்களுக்குத் தேவையான உதவி இந்நாள்மட்டும் தந்தருளி, கர்த்தர் ஆதரித்து நடத்தினார்!**

*சொல்லபோனால், நான் ஓர் ஆசிரியனாய் சம்பளம் வாங்கின காலத்தைவிட, இப்பொழுது அதிகச் சமாதானத்தோடும் மனதிருப்தியோடும் பிழைக்கும்படி ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். 'ஒன்றும் உங்களுக்கு குறைவாயிருப்பதில்லை' என்று சொன்ன ஆண்டவரின் மாறாத வாக்குக்காக, அவர் பாதம் பணிந்து வணங்குகிறேன்! வேலையிலிருந்து நீங்கினது முதல், யாதொரு*

*வெளிப்புற வருமானம் இல்லாதிருந்தும்,* **ஒருவரிடமும் கடன் வாங்காமல்,** *ஆண்டவர் எங்களைப் போஷித்துக் காப்பாற்றி வந்தார் என்பதை அறிந்த தேவமக்கள் என்னைப் பார்த்து: "நீங்கள் உங்கள் ஜீவியத்திலும், ஊழிய நாட்களிலும் கர்த்தருடைய சாட்சியாக விளங்கினீர்கள். கர்த்தர் தமது பிள்ளைகளைப் போஷித்துக் காப்பாற்றுகிறவர் என்பதற்கு* **இப்பொழுது நீங்கள் எங்களுக்கு சாட்சியாயிருக்கிறீர்கள்!"** *என்றார்கள். எனது வயது 86 ஆனபோதிலும், தேவனுடைய பிள்ளைகள் அநேகருடைய நல்விருப்பத்தாலும் வேண்டுதலாலும் நான் இதுவரை சுகத்துடன் பிழைத்திருந்து, தேவசித்தப்படி ஊழியம் செய்து வருகிறேன். இன்னும் எவ்வளவு காலம் சரீரத்தில் பிழைத்திருக்க ஆண்டவர் சித்தங்கொண்டிருக்கிறாரோ அதுவரை அவருக்கு நன்றி ஊழியம் செய்வேன்! ஒன்று நிச்சயம்: 'என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்' என்பதை சங்கீதக்காரனோடு சேர்ந்து சொல்லுகிறேன் (சங்.23:6). இந்த என் சிறிய சாட்சியை வாசிக்கும் தேவ மக்கள் அனைவரையும், ஆண்டவர் பரிபூரணமாய் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.*

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'தனித்து நிற்கவும்' துணிவு கொண்ட ஊழியர்கள் வேண்டும்!

*பவுல், தீமோத்தேயு போன்றோர், துணிவான ஊழியர்கள்*

*"இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்" (2கொரி.6:6). "எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள்* **ஒருவனுக்கும்** *அநியாயம் செய்யவில்லை,* **ஒருவனையும்** *கெடுக்கவில்லை,* **ஒருவனையும்** *ஏமாற்றவில்லை" (2கொரி.7:2) என்ற, பவுலைப்போன்ற உத்தம சாட்சியில்லாமல், ஊழியம் இல்லை!*

*உங்களது ஊழியத்தின் எல்லாப் பகுதிகளிலும் சுத்த மனச்சாட்சியை காத்துக்கொள்ளுங்கள் (அப்.24:16). கேள்விக்கு இடமான காரியங்கள் எதுவும் உங்கள் வாழ்வில் இருக்க வேண்டாம். தேவனுடைய இராஜ்யத்திற்காகச் செய்யும் எதிலும் பிராதுக்கு இடங்கொடாமல் வாழுங்கள். "இந்தக் காரியத்தை எல்லாரும்தான் செய்கிறார்கள்" என்று உங்களுக்குச் சாக்குப்போக்கு சொல்லிக்கொள்ள வேண்டாம். "எல்லாரும் அதைச் செய்கிறார்கள்; நான் ஏன் அதைச் செய்யக்கூடாது?" என்பது இறுதியில் உங்களைக் குழியில் தள்ளி வீழ்த்திவிடும்.*

*ஓர் உயர்ந்த மலையின் மேல் ஐயாயிரம் பன்றிகள் மேய்ந்து கொண்டிருந்தன. திடீரென அவையனைத்தும் பள்ளத்தாக்கை நோக்கி விரைந்து ஓட ஆரம்பித்தன. அதில் ஒரு குட்டிப்பன்றி இருந்தது. அது, தாய்ப் பன்றியிடம் "நாம் எங்கே போகிறோம்?" என்றுகேட்டது. அதற்கு அந்தப் பெரிய பன்றி, "வாயை மூடு, எல்லாரும் போய்க் கொண்டிருக்கிறார்கள், ஆகையால் நாமும் போகிறோம்" என்றது.*

**"அங்கே மற்றொரு இளம் பன்றி இருந்தது. அது இன்னொரு வயதான பன்றியிடம், "நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டது. அந்த வயதான பன்றி, "வாயை மூடு, எல்லாரும் போகிறார்கள், நாமும் போகிறோம்" என்றது. அவைகளெல்லாம் கடலினுள் மூழ்கி மாண்டன!**

ஐயாயிரம் என்பது குறைந்த எண்ணிக்கை! அதைவிடக் கூடுதல் எண்ணிக்கையாகவும் இருந்திருக்கலாம். அடுத்த முறை "எல்லாரும் இதைச் செய்கிறார்கள்" என்ற தொனியைக் கேட்க நேர்ந்தால், லேகியோனிடமிருந்து இயேசு பிசாசுகளைத் துரத்தியபோது பன்றிகளுக்கிடையே நடந்த இந்த உரையாடலை நினைத்துக்கொள்ளுங்கள்!

*உலகத்தினின்று வேறுபட்டு வாழத் துணிவுடன் இருங்கள். "Dare to be a Daniel, Dare to stand alone" என்ற ஓர் ஆங்கில ஞானப்பாடல் உண்டு. துணிச்சலுடன் எதிர் நீச்சல் போடுவதில் ஒரு தானியேலாக, ஒரு யோசேப்பாக, ஒரு பவுலாக இருங்கள்! பவுல் வாழ்ந்த காலத்தில் ஊழிய சூழ்நிலை மிகக் கடினமாகத்தான் இருந்தது. ஆனால் பவுல் சொல்வது என்னவென்றால்: "சகோதரரே, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை, மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளென்று உங்களுக்குப் பலமுறை சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடு சொல்லுகிறேன்: அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய பெருமை அவர்களுக்கே மானக்கேடு! அவர்கள் மண்ணுக்குரியவைகளை மாத்திரமே எண்ணுகிறார்கள்" (பிலி.3:17-19).*

பவுல் இதனை வெற்றித்தொனியுடன் அல்ல, கண்ணீருடன் சொன்னார். பவுலைப்போல ஒரு வேறுபட்ட நபராக வாழ்ந்திட துணிச்சலுடனிருங்கள்; தீமோத்தேயுவைப்போல ஒரு வித்தியாசமான நபராக வாழ்ந்திட தைரியமாயிருங்கள்! தீமோத்தேயுவைக் குறித்து

பவுல் என்ன குறிப்பிடுகிறார்? “உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் ‘அவனையன்றி’ வேறொருவனும் என்னிடத்திலில்லை” என்றார் (பிலி.2:20). ஏன்? “மற்றவர்களெல்லாரும்.... தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்” (பிலி.2:21). சபை போதகப் பிரசங்கிகளைக் குறித்தே இப்படிச் சொல்கிறார்! அவர் கண்ணுற்ற ஊழியர்களைக் குறித்தே வேதனையுடன் சொன்னார்: “இந்த இடத்திலுள்ள எல்லா ஊழியர்களிலும், தியாகத்துடன் தன்னலமின்றி உங்களது சுக செய்திகளை விசாரிப்பதற்கு தீமோத்தேயுவாகிய ஒரே ஒரு நபர்தான் இருக்கிறார்” என்று குறிப்பிட்டார்! ஒவ்வொரு தலைமுறையிலும் இதுவே உத்தமத்திற்குரிய மிகப்பெரிய போராட்டமாக இருக்கிறது.

உலக மக்கள் தொகையில், பெரும்பான்மையினரும் உள்ளனர்; சிறுபான்மையினரும் உள்ளனர். பாவிகள் பெரும்பான்மையினர்; **பரிசுத்தவான்கள் சிறுபான்மையினர்!** தேவனுடைய சபையிலும் பெரும்பான்மையினர் உள்ளனர்; சிறுபான்மையினரும் உள்ளனர்: “நாங்கள் திருமுழுக்கு பெற்று, பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பது போதுமானது. இதே வேகத்தில் நாங்கள் மெதுவாகச் சென்றால், எப்படியாவது போய் கரை சேர்ந்திடுவோம்” என்று பெரும்பான்மையினர் சொல்லுவார்கள்! ஆனால் சிறுபான்மையினரோ, “இது போதாது, நான் இன்னும் உன்னத அனுபவங்களைப் பெற விரும்புகிறேன்; நான் இன்னும் ஆழமாய்ப் போக விரும்புகிறேன்! நான் எனது கர்த்தரை தரிசிக்க விரும்புகிறேன்; நான் அவரது அருகில் மென்மேலும் நெருங்கிச் செல்ல விரும்புகிறேன்” என்றே சொல்வார்கள். இப்போது, உங்களைச் சுற்றியுள்ள தற்கால ஊழியர்களைப் பாருங்கள்: அவர்களில், “தங்களது பெயர் புகழுக்காக, சுயநலத்திற்காக, சுயமகிமைக்காக மற்றும் தங்களது சொந்த சாம்ராஜ்யத்தைப் பரப்புவதற்காகப்” பணியாற்றும் பெரும்பான்மையினரே உண்டு!

> “ **ஆயினும், இந்த கேடான இவர்களின் மத்தியில், தன்னலத்திற்குச் செத்து, தங்களைத் தாங்களே மறைத்து, தரமான பணியைச் செய்ய நாடும் சிறுபான்மையினரும் இருக்கத்தான் செய்கிறார்கள்!**

எனவே இந்த உலகிலும், சபையிலும், ஊழியங்களிலும் ஒரு கூட்டம் பெரும்பான்மையினரும், ஒரு கூட்டம் சிறுபான்மையினரும் இருக்கிறார்கள். பன்னிரண்டு பேர் போனார்கள்! அதில் பத்து பேர் பெரும்பான்மையினர், காலேப் மற்றும் யோசுவா என்ற இருவர் மட்டும் சிறுபான்மையினராக இருந்தனர்! வேதம் கூறுகிறபடி: **“காலேப் வேறே ஆவியை உடையவனாயிருந்தான்”** (எண்.14:24).

உங்களைப் பெரும்பான்மையினரைப் பின்பற்றுகிறவர்களாக அல்ல, சிறுபான்மையினருடன் கூட்டுறவு கொள்ளும் ஒரு வேறுபட்ட நபராக, ஊழியராக, சபையோராக மாற்றும்படி தேவன் விரும்புகிறார். பெரும்பான்மையினர் தெரிந்து கொள்ளும் வாசல் அகலமானது, வழி விசாலமானது. ஆனால், அது அழிவுக்கு நேராய் வழிநடத்தும்! சிறுபான்மையினர் தெரிந்தெடுக்கும் வாசல் இடுக்கமானது, வழி மிக நெருக்கமானது, கடினமானது. ஆனால், அது நித்திய வாழ்வுக்கு நேராக வழி நடத்தும்! "வெகு சிலரே" அதைக் கண்டுபிடிப்பர். அந்தச் சிலரில் ஒருவராக உங்களை வைத்திடவே தேவன் விரும்புகிறார்!

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'தேவ ஜனத்தை' வழிதப்பிட ஆலோசனை தந்த பிலேயாம்!

*தேவ தீர்க்கதரிசி 'குறிசொல்லும்' தீர்க்கதரிசியாய் மாறிய அபாயம்*

"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல! மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல!..... **இஸ்ரவேலின் தேவனானவர் அவர்களோடே இருக்கிறார்,** அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார்! அதை நான் திருப்பக்கூடாது" என, இஸ்ரவேலை சபித்திட அழைத்த மோவாபிய ராஜா பாலாக்கிடம் தைரியமாய் பேசியவர்தான் இந்த இஸ்ரவேலின் தீர்க்கதரிசி பிலேயாம்! (எண்.23:19-21). "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்" (எண்.24:1) எனக்கூறி, பாலாக் ராஜாவின் வெகுமதிகளை ஏற்க மறுத்தார்! மூன்று முறை நயந்து நயந்து பிலேயாம் தீர்க்கதரிசியை தன் வழி கொண்டுவர முயற்சித்த பாலாக் ராஜா, தோல்வியடைந்தான்!

*ஆகிலும் பலமுறை மோவாபிய ராஜா காண்பித்த அநீதத்தின் கூலியின் ஈர்ப்பில் பிடிபட்ட பிலேயாம், "தேவ ஜனத்தை சபிக்கமாட்டேன்" என உரைத்த அந்த தீர்க்கதரிசி, இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் "செம்மையான வழியை விட்டு" விலகினான்! (2பேதுரு 2:15). தன்னால் நேருக்கு நேராய் அந்த உத்தம இஸ்ரவேலர்களை சபித்திட அஞ்சிய அந்த பிலேயாம், கர்த்தரை வைத்தே அவர்களை சபிக்கச் செய்திட 'துர் ஆலோசனை' கூறி அதன் மூலமாய் இஸ்ரவேல் ஜனங்களை தந்திரமாய் வீழச்செய்தான்! (2பேதுரு 2:18). அந்த செயல் "**பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகம்**" என்றே யூதா 11-ம் வசனத்தில் குறிப்பிட்டார்!*

கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் செய்திட அவன் தந்த துர் ஆலோசனை என்ன தெரியுமா? (எண்.31:16). பாலாக் ராஜாவின் மோவாபிய புறஜாதி பெண்களோடே 'வேசித்தனம் செய்திடவும்'

*அவர்களின் தேவர்களுடைய பலிகளை இஸ்ரவேலர்கள் விருந்துண்ணச் செய்திடவும் தாராளமாய் அனுமதித்து விட்டால் 'கர்த்தரே முன் வந்து' சாபத்துக்குள்ளாக்கி விடுவார்! பிலேயாமின் இந்த துர் ஆலோசனை வெற்றி பெற்று, ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் மேல் கர்த்தருடைய கோபம் மூளும்படி செய்து விட்டது (எண்.25:1-3).*

"

**இவ்வாறே தேவ ஜனத்திற்கு துரோகம் செய்தான் இந்த *பிலேயாம்* தீர்க்கதரிசி! பிலேயாமின் செயலை குறிப்பிட்டே "தான் கக்கினதை தின்னும் நாய்" என்றும் "கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" போன்ற பண்டைய சொல், மெய்யான பழமொழியாய் மாறிவிட்டது! (2பேதுரு 2:22) என, வேதம் வருத்தத்துடன் தெரிவிக்கிறது!**

*பிலேயாமின்* இந்த வஞ்சக செயலை, ஆண்டவர் இயேசு குறிப்பிட்டு, அதுபோன்ற துரோகத்தை *பெர்கமு சபை* ஊழியன் துணிகரமாய் கையாளுகிறான் என குறிப்பிட்டு: "....வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான **இடறலை** இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி *பாலாக்* என்பவனுக்குப் போதனை செய்த **பிலேயாமுடைய போதகம்!**" என எச்சரித்தார் (வெளி.*2:14*). மெய்யாகவே அந்த *பிலேயாம்* தீர்க்கதரிசி ஒரு காலத்தில் நல்ல போதகன்! ஏனெனில், கர்த்தர் அவனை சந்தித்து அவன் வாயிலே வசனத்தை அருளினார்! என்றல்லவா நாம் வாசிக்கிறோம்! (எண்.*23:16*). இப்போதோ, அவன் 'தன் வழியில்' நடந்து தேவ ஜனத்திற்கு 'இடறல்' உண்டாக்கும் 'பிலேயாமின் போதகம்' என மாறிவிட்டதை ஆண்டவர் கடிந்துரைத்தார்!

"

**கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பிலேயாம் தீர்க்கதரிசி, காலங்கள் செல்லச் செல்ல முடிவில் 'பொருளாசையினிமித்தம்' 'குறி சொல்லுகிறவன்' என்ற தீதான பெயரை சம்பாதித்து, இஸ்ரவேல் புத்திரரின் பட்டயத்தால், வெண்டுண்டு போனான்! என்ற சோகத்தை அடைந்தான் (யோசுவா 13:22).**

இன்றும், கர்த்தரால் அழைக்கப்பட்ட அவரது ஊழியர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு, தாங்கள் முன் நடக்கும் வழியை நம்பிப் பின்பற்றுகிறவர்கள் 'செம்மை வழி தவறாது' நடந்துவர ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும்! அதுபோலவே, நல்ல போதனை கொண்ட தீர்க்கதரிசி இன்று 'குறி சொல்லும் தீர்க்கதரிசியாய்' மாறிட முடியும் என்ற 'பிலேயாமின்' எச்சரிக்கையை அனைவரும் கருத்தில் கொண்டு, அவன் போன்ற 'செம்மை வழி தவறிய தீர்க்கதரிசிகளால்' வஞ்சிக்கப்படாதிருக்கவும் விழிப்புடன் இருக்கக்கடவோம்! ஆமென்.

*- T.ரத்தினகுமார்*

'ஜெய வாழ்வை' ஜெபத்தில் பிரகாசித்தவர்!

## St.மோனிகா



வட ஆப்பிரிக்காவின் ஓர் தலை சிறந்த முன்மாதிரியான ஜீவியம் செய்தவரே இந்த மோனிகா அம்மையார். பல ஆண்டுகளுக்குப் பிறகு வந்த மோனிகா என்ற பிரபல நடிகை இந்த அம்மையாரின் வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டார்கள் என கூறுவதுண்டு. தன்னுடைய 332-387AD ஆதிகால வாழ்க்கையிலும் கூட கிறிஸ்துவின் நற்பண்புகளை அதிகமாய் பிரதிபலித்த சகோதரியாய் வாழ்ந்தார்கள். தன் இளம் வயதிலேயே அவர்கள் சந்தித்த அநேக பாலிய சோதனைகள், கோபங்கள், வெறுப்புகள் போன்ற கொடிய சோதனைகளை தேவனோடு கொண்ட உறவிலும், இயேசுவின் மீது கொண்ட அன்பிலும், இடைவிடாத ஜெப ஜீவியத்தின் மூலமாய் கேடான பாவங்கள் அனைத்தையும் ஜெயித்து வாழ்ந்த சகோதரியாய் இருந்தார்கள்.

கத்தோலிக்க பெண்மணியாய் இருந்த அவர்கள் தன் இளம் வயது பாவங்களை ஜெபத்தின் மூலமாய் ஜெயித்தும் கிறிஸ்துவுக்குள் முன்னேறியும் வாழ்ந்தார்கள். குறைந்த வயதிலேயே அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது. அவருடைய கணவர் பெயர் பேட்ரியஸ். அவருடைய கணவரோ மிக பொல்லாதவராய் இருந்தார். தன் கணவரின் மனமாற்றத்திற்காய் தன் கண்ணீர் ஜெபத்தை தொடர்ந்தார். கேடான பழக்கவழக்கங்கள் கொண்ட அவரது கணவர், தன் மனைவி மோனிகா எளியோருக்கு தாராளமாய் கொடுத்த உபகாரத்தை அடியோடு வெறுத்து கோபம் கொள்வார். ஆயினும் தன் மனைவியின் பக்தியான கிரியைகளையும், ஜெப வாழ்க்கையையும் கண்ட அவளுடைய கணவர், என்னதான் கோபம் அடைந்தாலும் மனைவியை தாக்காமல் விலகி நிற்பார். மோனிகா அவர்களின் மூன்று பிள்ளைகளில், அகஸ்டின் என்ற அவரது மகன் மிகக் கொடிய துராகிதனாய் இருந்தான். 'இப்போது' மோனிகாவின் ஜெப ஜீவியம் இன்னும் அதிகமாய் வலிமை பெற்றது! கர்த்தருடைய சமூகத்தில் தன் மகனின் மனந்திரும்புதலுக்காக கண்ணீரோடு ஜெபித்தார்கள். வீட்டை விட்டு ரோம் நகருக்கு ஓடிச்சென்ற அகஸ்டினுக்காக விசுவாசத்தோடும் கண்ணீரோடும் ஜெபங்களை ஏறெடுத்து, முடிவில் அகஸ்டின் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டான். கடைசி நாட்களில், தன் தாயைக் குறித்து எழுதிய ஒரு புத்தகத்தில்: "மோசமான பழக்கங்களும் சோம்பேறியுமாயிருந்த என்னை, தன் கண்ணீர் ஜெபத்தினால் மீட்டு எடுத்த என் தாய்" என குறிப்பிட்டிருந்தார். மேலும் குறிப்பிடும்போது: "ஒரு கூடை நிறைய பழங்கள் நிறைந்த ஒரு பெண்மணியாய், தன்னிடம் வருபவர்களுக்கெல்லாம் நற்பண்புகளை வாரி வழங்கியவர்!" என நன்றியோடு குறிப்பிட்டிருந்தார். அவர் மரித்து பல்லாண்டுகளுக்குப் பிறகு, மோனிகா அம்மையாருக்கு கத்தோலிக்க சபை புனிதர் பட்டம் வழங்கி கௌரவித்தது. "தேவனுக்கு தூரமானதென எதுவும் இல்லை" **(Nothing is far from God)** என அவர் கூறிய இந்த அரிய வாக்கியம் அவருடைய ஜெப ஜீவியத்திலிருந்து விளைந்த கனியாகும்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'ஒரு பாவி' இரட்சிக்கப்படாமல், நல்லவனாய் மாறிட இயலாது!

'நற்செயல்களால்' இரட்சிப்படையலாம் என்பது சாத்தானின் சுவிசேஷம்! இது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு மாறானது, முற்றிலும் விரோதமானது! 'மனிதனுடைய நற்குணத்தின்' தகுதியைப் பார்த்து தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுகிறார் என்றே இந்த உபதேசம் நம்பச் செய்கிறது. "நல்லவனாக இரு, நல்லதையே செய்" என்பது சாத்தானின் தந்திர உபதேசத்தின் அழுத்தமான வலியுறுத்தல்! பாவத்தால் சீர்கெட்டுப்போன மனித சுபாவத்தில் நலமானது எதுவும் இல்லை என்பதை இந்தப் போதனை ஒப்புக்கொள்ளுவதில்லை. இரட்சிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முக்கியப்படுத்தாமல், இரட்சிப்பினால் உண்டாகும் குணத்தைப் பற்றியே அது பேசுகிறது. இரட்சிப்பின் அனுபவம் இருந்தால்தான், இரட்சிப்பின் நற்குணசீலங்கள் உருவாகும் என்ற உண்மையை இப்படிப்பட்ட மாயமான போதனைகள் சொல்லுவதில்லை. ஓ வாலிபனே, 'நான் நல்லவனாகவே இருக்கிறேன்' என்ற நிலையிலிருந்து "நான் பாவி, என்னை இரட்சியும் இயேசுவே!" என்பதைத் தவிர நீ இரட்சிக்கப்பட வேறு வழி ஏதும் இல்லை என அறிவாயாக!

இந்த உலகத்தை வசதியான, மனதுக்குப் பிடித்த ஒரு மனோகர வாழுமிடமாக மாற்றி, கிறிஸ்து இல்லாவிட்டாலும் குறை எதுவும் இல்லை என்றும், தேவனைத் தேட வேண்டிய அவசியம் இல்லை என்றும் மனிதரை எண்ணச் செய்வது பிசாசின் நோக்கம். மனிதனை இந்த உலகத்தைப் பற்றியே அதிகமாகச் சிந்திக்கச் செய்து, வரும் உலகத்தைப் பற்றி நினைக்க நேரமோ, விருப்பமோ இல்லாதபடி செய்துவிட 'மானிடர்களுக்கு நல்லதே செய்வோம்' என்ற கொள்கை பெரு முயற்சி செய்கிறது. தாராள மனப்பான்மை, சமுதாய சேவை, அன்புச் செயல்கள் ஆகியவற்றை இந்த கொள்கை வஞ்சகமாய் பயன்படுத்துகிறது! பிறருடைய நன்மைக்காக வாழ வேண்டும், எல்லாரிடமும் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றுகூட போதிக்கிறது. இப்படிப்பட்ட போதனைகளை மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். ஏனெனில், மனிதன் சுபாவத்தின்படி பாவத்தில் விழுந்த நிலைமையில் இருக்கிறவன், தேவனுடைய ஜீவனுக்கு அந்நியன், அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்தவன். ஆகவே, மறுபடியும் பிறப்பதில்தான் அவனுடைய ஒரே நம்பிக்கை உள்ளது என்ற உண்மைகளை இந்தப் போதனை புறக்கணிக்கச் செய்கின்றது. 'நீயோ நல்லவனாக இரு' என்ற போதனை இன்று கவர்ச்சி நிறைந்ததாய் மாறி, அனேக குருஜிக்களை தோன்றச் செய்துவிட்டது! வாலிபனே, உன்னை கேடான பாவியாக உணர்ந்து, இரட்சகரிடம் வா! அவர்களையே கர்த்தர் ஏற்று, இரட்சிக்கிறார், வாழ்வு தருகிறார்!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**